**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284/2017**

DW1 – பாலமுரளி த/பெ கோவிந்தராஜன்
நாள் –24.01.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

29.08.2017 தேதியிட்ட தாவா சொத்தை நான் சாகுபடி செய்து வருவதற்கான வட்டாட்சியர் வழங்கிய அடங்கலின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 29.08.2017 தேதியிட்ட தாவா 1–வது அயிட்ட சொத்தை பொறுத்து வட்டாட்சியர் வழங்கிய சிட்டாவின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 14.10.2023 தேதியிட்ட எனது சேமிப்பு வங்கி கணக்கின் இணையவழி கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.